# குழந்தைகளுக்கு வேதாகமம்

வழங்குபவர்

# பேதுருவும் ஜெபத்தின் வல்லமையும்



எழுதியவர்: Edward Hughes

சித்தரிப்பவர்: Janie Forest

தழுவியவர்: Ruth Klassen

மொழிபெயர்ப்பாளர்: Rev. Dr. Dasan Jeyaraj

உருவாக்குபவர்: Bible for Children
www.M1914.org

©2014 Bible for Children, Inc.
உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.



இயேசுவைப்பற்றி
சொல்வதற்காக
அப்போஸ்தலனாகிய
பேதுரு நாடு முழுவதும்
பிரயாணம் பண்ணினான்.
ஒரு நாள் லித்தா என்ற
ஊரிலே, எட்டு வருடமாக
படுக்கையிலேயிருந்த ஒரு
மனிதனை சந்தித்தான்.



"இயேசு கிறிஸ்து
உனக்கு சுகமளிக்கிறார்.
உன் படுக்கையை
போட்டுக்கொள்."
என்று பேதுரு
சொன்னான். அந்த
மனிதன் உடனே
எழுந்தான்.



இதைப்பார்த்த
ஜனங்கள்
தேவனிடத்தில்
திரும்பினார்கள்.



அருகிலே இருந்த யோப்பா
பட்டணத்து மக்கள் கவலையோடு
இருந்தார்கள். ஒரு கிறிஸ்தவ
பெண்மணி தொற்காள் என்பவள்
இப்போதுதான் மரித்துப்போனாள்.

அவளுடைய சிநேகிதர்கள்
அவளை அடக்கத்திற்காக
ஆயத்தம்பண்ணி,
அவளை மேல் அறையிலே
கிடக்கப்பண்ணி அவளுக்காக
துக்கம் கொண்டாடினார்கள்.



ஆனால் தொற்காளின்
சிநேகிதர்கள் பேதுரு
அந்த பகுதியிலே
இருக்கிறார் என்று
கேள்விப்பட்டார்கள்.





அவரை உடனே
யோப்பா வரும்படி
சொன்னார்கள், அவன்
மேலறைக்கு வந்தபோது,
அங்கிருந்த விதவைகள்
தங்களுக்கு தொற்காள்
உண்டுபண்ணின
துணிமணிகளையும்,
ஆடைகளையும்
காண்பித்தார்கள்.
எல்லோரும் அழுதார்கள்.

ஆனால், அவன்
அவர்களையெல்லாம்
வெளியே போக
சொல்லிவிட்டு, முழுங்காற்
படியிட்டு ஜெபம் பண்ணினான்.
அவன் சரீரத்தைப்பார்த்து
சொன்னது, "தொற்காளே,
எழுந்திரு," அவள்
கண்களை திறந்து
பேதுருவை
பார்த்தபோது,
எழும்பி
அமர்ந்தாள்.





பின்பு அவன் தன் கையை அவளிடம் கொடுத்து அவளை தூக்கினான், மற்றும் அவன் பரிசுத்தவான்கள் (கிறிஸ்தவர்கள்) மற்றும் விதவைகளை அழைத்து, அவளை உயிருள்ளவளாக அவர்களுக்கு காண்பித்தான்.  இந்த செய்தி யோப்பா முழுவதும் பரவியது, மற்றும் அநேகர் ஆண்டவரை விசுவாசித்தார்கள்.

கடற்கரையின் அருகில் உள்ள ஒரு வீட்டிலே, பேதுரு அநேக நாட்கள் யோப்பாவிலே தங்கியிருந்தான். ஒரு நாள் அவன் வீட்டின் மேலறையிலே



ஜெபிப்பதற்காக சென்றான். அந்த பட்டணத்தில் மதிலை

பார்த்திருந்தால், மூன்று பேர் பிரயாணம் பண்ணி தன்னை கண்டுபிடிக்க வருகிறார்கள் என்று அறிந்திருக்கலாம்.

இந்த மூன்று மனிதரும் தேவனை வழிபட்ட ரோம போர்ச்சேவகனாகிய கொர்நேலியு என்பவனுடைய வேலைக்காரர்கள்.



கொர்நேலியுவிடம் தேவதூதன் ஒருவன் தரிசனத்தில் சொன்னது, "பேதுருவை அழைத்துவா. கடற்கரை அருகில் உள்ள தோல் பதனிடுகிற, சீமோன் வீட்டிலே தங்கியிருக்கிறான்.



நீ என்ன
செய்ய வேண்டும்
என்று அவன்
உனக்குச்சொல்லுவான்."

பேதுரு வீட்டின் மேல் அறையில் ஜெபிக்கும் போது, தேவன் அவனுக்கு ஒரு தரிசனத்தைக் கொடுத்தார். ஒரு பெரிய துப்பட்டி மேலே இருந்து பூமிக்கு இறங்கி வருகிறது போல காணப்பட்டது. அந்த துப்பட்டியில் விலங்குகளும், பறவைகளும் இருந்தன.



அவைகள் "சுத்தமில்லாதவை" என்று பேதுருவால் சொல்ல முடிந்தது. அப்படியானால் யூத மத ஈடுபாடுவுடையவர்கள் அவைகளை சாப்பிட அனுமதியில்லை.



திடீரென, ஒரு சத்தம் அவனுக்கு கேட்டது, "பேதுருவே, எழுந்து, அடித்து புசி."

"அப்படியல்ல, ஆண்டவரே!" என்று பேதுரு தேவனிடம் சொன்னான். "நான் ஒருபோதும் தீட்டு அல்லது அசுத்தமானவைகளை சாப்பிட்டதே கிடையாது."



இரண்டாவது முறை
ஒரு சத்தம் அவனிடம்
பேசியது. "தேவன்
சுத்தப்படுத்தியவைகளை
நீ தீட்டு என்று
சொல்லக்கூடாது,"
மூன்று முறை அப்படி
சொல்லப்பட்டது. பின்பு
அந்த துப்பட்டி
வானத்துக்கு
மறுபடியுமாக
எடுத்துக்
கொள்ளப்பட்டது.



அந்த தரிசனத்திற்கு என்ன அர்த்தமென்று பேதுருவுக்கு புரியவில்லை.  அதைப்பற்றி அவன் சிந்தித்துக்கொண்டிருக்கும் போது, மூன்று மனிதர்கள் அவனைத்தேடுகிறார்கள் என்றும் அவன் அவர்களுடன் செல்ல வேண்டுமெனவும் தேவன் சொன்னார்.



அந்த மூன்று மனிதர்களும் தேவதூதன் கொர்நேலியுவிடம் பேதுருவை அழைத்து வரும்படி சொன்னதை கேட்ட போது, தன்னை தேவன் நடத்துகிறார் என்று பேதுருவுக்கு புரிந்தது.





ஒரு வேளை, யூதனல்லாத
ஒரு மனிதனுடைய
வீட்டிற்கு அவன்
சென்ற போது, தேவன்
எல்லா மக்களையும்
நேசிக்கிறார் - இயேசுவே
இவ்வுலகத்தின் இரட்சகர்
என்று எல்லா தேசத்தாரும்
அறிய தேவன் விரும்புகிறார்
என்றும் அவன் புரிந்து
கொண்டான்.



பேதுரு வந்து சேர்ந்த
போது கொர்நேலியு
அவன் பாதத்தில் விழுந்து
பணிந்து கொண்டான்.

"எழுந்திரு, நானும் உம்மை போல் ஒரு மனிதன் தான்," என்று பேதுரு கொர்நேலியுவிடம் சொன்னான்.



பின்பு பேதுரு அந்த வீட்டிலுள்ள ஜனங்களைப் பார்த்து, "ஒரு யூத மனிதன் மற்றதேசத்தாரிடம் செல்வதோ அல்லது சம்பந்தம் கலப்பதோ நியாயப்பிரமாணத்திற்கு ஏற்றது அல்ல என்று உங்களுக்குத்
தெரியும்."



"ஆனால் தேவன் எந்த மனிதனையும் தீட்டு, அல்லது அசுத்தமானவன் என்று நான் சொல்லக்கூடாது என்பதாக காண்பித்திருக்கிறார்."



இயேசுவை தேவகுமாரனென்றும், அவர் சிலுவையில் மரித்து உயிர்த்தெழுந்து உலகத்து இரட்சகரானார் என்று பேதுரு அந்த புற ஜாதியாருக்குச் (யூதரல்லாதவருக்கு) சொன்னான். பின்பு பரிசுத்த ஆவியானவர் அவர்கள் மேல் வர அவர்கள் தேவனை துதிக்க ஆரம்பித்தார்கள்.



பேதுருவின் ஆறு யூத நண்பர்களும் ஆச்சரியப்பட்டார்கள். அது பெந்தேகோஸ்தே நாளைப்போலிருந்தது. பரிசுத்த ஆவியானவரின் வரமானது புறஜாதியார்கள் மீதும் பொழியப்பட்டது.



பின்பு அந்த புதிய விசுவாசிகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான்.



எருசலேமிலே, புறஜாதிகளை சந்தித்தற்காக பேதுருவை கிறிஸ்தவர்கள் கண்டித்தார்கள்.  அப்பொழுது அவன் கொர்நேலியும், அவனும் ஜெபத்தில் பெற்றுக்கொண்ட தரிசனத்தை அவர்களிடம் சொன்னான்.  அதை கேட்ட அவர்கள், எருசலேம் கிறிஸ்தவர்கள், மவுனமாகி விட்டனர். தேவனுடைய அன்பு எல்லோருக்கும் உரியது, என்பதை தேவன் கிறிஸ்தவ சபைக்கு ஜெபத்தின் மூலமாக வெளிப்படுத்தினதைக் கேள்விப்பட்டு தேவனை மகிமைபடுத்தினார்கள்.



பேதுருவும் ஜெபத்தின் வல்லமையும்

# தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமத்திலிருந்து ஒரு கதை

## காணப்படுமிடம்

அப்போஸ்தலர் 9 - 12

“தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது வெளிச்சம் கொடுக்கிறது.” சங்கீதம் **119:130**

முற்றும்

இந்த வேதாகம கதைகளானது நம்மை படைத்த மற்றும் நீங்கள் அவரை அறிந்து கொள்ள வேண்டுமென்கிற அற்புதமான தேவனைப் பற்றியதாகும்.

நாம் அநேக தவறுதல்களைச் செய்திருக்கிறோம் என்று தேவனுக்குத் தெரியும். அவர் அதை பாவம் என்று கூறுகிறார். பாவத்திற்கு தண்டனையோ மரணம் ஆனால் தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசுவை அனுப்பி, நம்முடைய பாவங்களுக்காக அவரை சிலுவையில் மரணமடையச் செய்தார். பின்பு இயேசு உயிருடன் எழும்பி பரலோக வீட்டிற்குச் சென்றார். நீங்கள் இயேசுவை விசுவாசித்து, உங்களுடைய பாவங்களுக்கு மன்னிப்பு கேட்டால் அவர் அதைச் செய்வார். அவர் இன்றே உங்களிடத்தில் வந்து உங்களில் வாசம் பண்ணுவார், நீங்களும் என்றென்றும் அவரோடு வாசம் பண்ணுவீர்கள்.

இது உண்மையானது என்று நீங்கள் நம்பினால், பின்வரும் வாக்கியங்களை தேவனிடத்தில் சொல்லலாம். பிரியமுள்ள இயேசு, நீர் தேவனென்று நான் நம்புகிறேன், எனக்காக நீர் மனிதனாக வந்து என்னுடைய பாவங்களுக்கு மரித்து, இப்போது நீர் மறுபடியும் உயிரோடிருக்கிறீர். தயவு செய்து எனக்குள்ளே வாரும், என்னுடைய பாவங்களை மன்னியும், அதினாலே இன்று ஒரு புதிய வாழ்க்கையை நான் பெற்று, ஒரு நாளில் நான் உம்மோடு என்றென்றும் இருக்க உதவி செய்யும். உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். உம்முடைய பிள்ளையாக உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். ஆமென்.

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து தேவனிடம் பேசுங்கள் யோவான் 3:16